### ஒன்றிய அரசு நடத்தும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட மூடு விழாவிற்கு

# பழனிசாமி வரவேற்பு பத்திரம் வாசிப்பதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, டிச. 19 -**

**“ஒன்றிய அரசு நடத்தும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட மூடு விழாவிற்கு பழனிசாமி வரவேற்பு பத்திரம் வாசிப்பது மன்னிக்க முடியாத பச்சைத் துரோகமாகும்” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

ஏழைகளின் வயிற்றில் அடிக்கிறது ஒன்றிய பா.ஜ.க.; அதற்கு ஒத்து ஊதுகிறார் திருவாளர் பழனிசாமி! #VBGRAMG திட்டத்தில் 125 நாட்கள் வேலை என்பது ஏமாற்று வேலையே!

100 நாட்கள் வேலை உத்தரவாதம் என்று சட்டம் இருந்தபோதே, பா.ஜ.க. ஆட்சியில் மக்களுக்கு 20 முதல் 25 நாட்கள் மட்டுமே வேலை கிடைத்தது. அதற்கான ஊதியத்தொகையையும்திட்டச்செலவையும் மாதக் கணக்கில் விடுவிக்காமல் வஞ்சித்தனர். அந்த நிலுவைத் தொகையையும் நாம்போராடிப்பெறவேண்டிய அவலம்தான் இருந்தது.


**நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு பேரிழப்பை சந்திக்கும்!**

தற்போது, ஒன்றிய அரசின் விருப்பத்தின் பேரில் அதிகாரிகள் விரும்பினால் வேலை வழங்கலாம் என்று விதிகள் மாற்றப்பட்ட பிறகு, ஓரிரு நாட்கள் வேலை கிடைப்பதே அரிதாகப் போகிறது. நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு பேரிழப்பைச் சந்திக்கப் போகிறது.

திட்டச் செலவில் 40% தொகையை மாநிலங்கள் ஏற்க வேண்டும் என்ற நிபந்தனை, #GST வரி மாற்றங்களுக்குப் பிறகு கடும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டு வரும் மாநில அரசுகளுக்குத் தரப்படும் சுமை; தண்டனை!

கிராமப்புறப் பெண்கள், ஏழை விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றி வந்த #MGNREGA திட்டத்துக்கு மூடுவிழா நடத்துவதற்குத் திருவாளர் பழனிசாமி அவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசிப்பது மன்னிக்க முடியாத பச்சைத் துரோகம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



மக்களைக் காக்கக் குரல்கொடுக்கச் சொன்னால்,
டெல்லியைக் குளிர்விக்க அறிக்கை விட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர்!

- நாம் தட்டி எழுப்பிய பின் துயில்கலைந்து, #MGNREGA திட்டத்தின் பெயர் மாற்றத்தை மட்டும் கைவிடக் கோரிப் 'பட்டும் படாமல் தொட்டும் தொடாமல்' தனது ஸ்டைலில் 'அழுத்தம்' கொடுத்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி!
- அத்தோடு, 100 நாள் வேலைத்திட்டம் 125 நாட்களாக உயரவுள்ளதாகவும் ஒரு பொய்யை அவிழ்த்து விட்டிருக்கிறார். 125 வேலை நாட்கள் என்பது பேப்பரில் மட்டுமே இருக்கப் போகிறது என அனைவருமே சுட்டிக்காட்டியும் அறியாத அப்பாவியா அவர்?
- மக்கள் தொகைக் கட்டுப்பாட்டில் சாதனை படைத்ததற்காக, #Delimitation மூலமாகத் தமிழ்நாட்டின் தொகுதிகளைக் குறைக்கப் பார்ப்பதைப் போலவே, வறுமை ஒழிப்பில் நாட்டிலேயே முதலிடத்தைப் பிடித்ததற்குத் தண்டனையாகத் தமிழ்நாட்டுக்கான வேலை நாட்களைக் குறைக்கப் போகிறார்கள் என நான் சுட்டிக்காட்டியிருந்ததை வசதியாக மறந்துவிட்டார் எதிர்க்கட்சித் தலைவர்.
- ஒன்றிய அரசின் நிதியில் செயல்படுத்திய #MGNREGS திட்டத்தைச் சிதைத்து, நிதிச் சுமையை மாநிலங்களின் தலையில் #VBGRAMG கட்டுவதைப் பற்றியும் வாய்திறக்க அவருக்கு வலிக்கிறது போலும்.
- தனது 'Owner' பா.ஜ.க. செய்வது சரி என்றால், துணிச்சலாக, வெளிப்படையாக #VBGRAMG-யைப் பழனிசாமி அவர்களால் ஆதரிக்க முடியுமா? சவால் விடுகிறேன்...

mkstalin 18.12.2025



சென்னை, சைதாப்பேட்டை, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தில் நேற்று (18.12.2025), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் சென்னை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக நாடகத்துறை இணைந்து நடத்தும் ”இந்தியத் தமிழ்ச் சங்கங்களின் பணிகளும் பங்களிப்புகளும்” என்ற தேசிய கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து, தலைமையுரையாற்றினார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் – முனைவர் ந.அருள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட

# அயலக அணி சார்பில் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் வழங்கினார்!

*கன்னியாகுமரி, டிச.19 -*

*தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அயலக அணி சார்பில் பள்ளி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை நலத்திட்டம் வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் (17.12.2025 - புதன் கிழமை) மாலை 06.00 மணியளவில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் கன்னியா குமரி கிழக்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் முகமது பஷீர் தலைமையில் நடைபெற்றது.*

*சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு பள்ளி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி சிறப்பித்தார்.*

*நிகழ்ச்சியில் மாநில தி.மு.க. அயலக அணி துணைச் செயலாளர் அ.பாபு வினிபிரட், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அயலக அணி தலைவர் சி.சுஜின் ஜெகேஷ், துணை அமைப்பாளர்கள் வி.என்.நாகராஜன், அ.ரபீக், நாகர்கோவில் மாநகர அயலக அணி தலைவர் மக்கீன் அப்துல் சமது, ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.சதாசிவன், சார்பு அணிகளின் நிர்வாகிகள் இ.நெ.சங்கர், ராஜேஸ் ரெத்தினமணி, பூ.சிதம்பரம், ரெ.சகாய மைக்கேல் ராஜன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.*

